**சாட்சிய வாக்குமூலம்**

# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No. 73/2024

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா | : 4 | நாள் | : 07.04.2026 |
| பெயர் | : கருப்பசாமி | ஜாதி | : |
| தந்தை பெயர்/ | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலூகா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07th day of April 2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இன்று அழைப்பாணையின் பேரில் நீதிமன்றம் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள 24.09.2016 ம் தேதியிட்ட நா.க. எண்.3268/2016 சமாதான கூட்ட நடவடிக்கை 07.03.2017 ம் தேதிய சமாதான கூட்ட தீர்மானம் 15.02.2018 மற்றும் 20.02.2018 தேதிய நா.க. எண்.135/2018 கூட்டம் தொடர்பான நடவடிக்கை ஆவணங்கள் மேற்படி கூட்ட நடவடிக்கையை தொடர்ந்து புளியங்குடி காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஆகியவற்றை ஆஜர்படுத்தி சாட்சியமளிக்கும்படி அழைப்பாணை வரப்பெற்றது. மேற்கண்ட ஆவணங்கள் ஓராண்டு மட்டுமே பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் என்பதால் அவை தற்போது எங்கள் அலுவலகத்தில் இல்லை. அழைப்பாணை வரப்பெற்ற பின்னர் இது தொடர்பாக எங்கள் அலுவலகத்திலிருந்து அரசு வழக்கறிஞருக்கு மேற்கண்ட விவரம் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்து அந்த நகல் சாட்சி தரப்பு சான்று ஆவணம் 1 ஆகும். எங்கள் அலுவலகத்தில் ஆவணங்கள் அழிக்கப்படுவதற்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அது பதிவேட்டில்

பராமரிக்கப்படும் அதற்கான அறிவிப்பு வெளியிடப்படும். நான் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எந்த தேதியில் எந்த உத்தரவின்படி அழிக்கப்பட்டது என்ற விவரங்கள் பதிவேட்டில் குறிக்கப்படும் அந்த பதிவேட்டு விவரங்களை சாட்சி தரப்பு சான்றாவணம் 1ல் குறிப்பிடப்படவில்லை. நான் இன்று அழித்தல் பதிவேட்டை பார்வையிட்டு வந்து சாட்சியமளிக்கவில்லை.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

05.11.2025 முதல் நான் கடையநல்லூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் நடவடிக்கைகள் எனக்கு நேரில் தெரியாது.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.04.07 17:58:14 +0530